**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 113/2022 தேதி-28.03.2026
(PW.1) – ஜெயசிங்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

1.வழக்கு பட்டிகை சொத்தை எப்போது விலைக்கு வாங்கினேன் என்றால் 2021 ல் வாங்கினேன். நான் விலைக்கு வாங்கிய சொத்து விவசாய பூமி என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தும் விவசாய பூமி என்றால் சரிதான். எனக்கு விலைக்கு கொடுத்த ரிச்சர்டு சொர்ணா என்பவரின் முன்ஜென்மியிடம் இருந்து விலைக்கு வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், ஆவணங்களை பார்த்தேன்.

2. மேற்சொன்ன ரிச்சர்டு சொர்ணாவிற்கு விலைக்கு கொடுத்த விஜயன் C பட்டிகை சொத்தை வழிப்பாதையாக பயன்படுத்தி வந்தாரா என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் என்னுடைய விலை ஆவணத்திலும், என் முன்ஜென்மியின் ஆவணத்திலும் சொல்லப்பட்டுள்ளது. ஆவண எண் தெரியுமா என்றால் நினைவில் இல்லை. ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் முடியும். தற்போது வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

3. C பட்டிகை சொத்தை வழிப்பாதையாக விஜயன் பயன்படுத்தி வந்ததாக வேறு வருவாய் துறை ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வழிப்பாதை 30 ஆண்டுகளுக்கு மேலாக பயன்படுத்தி வருவதாக என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு 30 ஆண்டுகள் பயன்படுத்தி வந்தால் ரீ சர்வே வரைபடத்தில் தெரியவரும் என்றாலும், அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நெடுங்காலமாக பழக்கத்தில் இருந்து வரும் பாதை என்றால் நிலவியல் பாதை என்று அரசு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றாலும், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, பொது

பாதையாக இல்லாமல் அந்த வழியாக தோட்டம் வைத்திருந்தவர்கள் மட்டும் பயன்படுத்தி வந்த பாதையாகும். மேற்சொன்ன பாதை பொது பாதை என்று காண்ப்பிதற்கான ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அது மூன்று அண்ணன், தம்பிகள் சொத்துக்களுக்கிடையே அவரவர் கண்டங்களுக்கு இடையே அமைக்கப்பட்ட பாதையாகும்.

5. நான் விலைக்கு வாங்கிய விலை ஆவணத்தில் எல்கையில் தெற்கு பக்கம் பாதை இருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் முன்ஜென்மிகள் பாதையாக பயன்படுத்தி வந்ததன் அடிப்படையில் பாதையாக பயன்படுத்தி வருகிறோம். என் முன்ஜென்மியின் ஆவணத்திலும் தெற்கு பக்க எல்கையில் பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். A பட்டிகை சொத்தில் தற்போது என்ன பயிரிட்டுள்ளேன் என்றால் இரப்பர் மரங்களும், வாழை மரங்களும் பயிரிட்டுள்ளேன்.

6. B பட்டிகை சொத்திலும் இரப்பர் மரங்களும், வாழை மரங்களும் பயிரிடப்பட்டுள்ளது.C பட்டிகை சொத்தில் இரப்பர் மரங்களும் வழக்கு தாக்கல் செய்த பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்டதாகும், பெரிய இரப்பர் மரங்களும் C பட்டிகையின் ஓரமாக அமைக்கப்பட்டுள்ளது. C பட்டிகை சொத்தை ஒருபோதும் நான் பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும், வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

7. B பட்டிகை சொத்தை 1வது பிரதிவாதி விலைக்கு வாங்குவதற்கு முன்பு அதன் முன் உரிமையாளர் பன்றிகளை வளர்த்து வந்தார் என்றால் சரிதான், அதில் ஒரு செட் உள்ளது. நான் குலசேகரம் காவல் நிலையத்தில் எந்த தேதியில் எதற்காக புகார் கொடுத்தேன் என்றால் 2023 ல் C பட்டிகை சொத்தான வழிப்பாதை அடைத்தது சம்மந்தமாக புகார் கொடுத்தேன். பொது பாதையை அடைத்ததாகவும், என்னை ஆபாசமாக பேசியதாகவும் குலசேகரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் நான் சென்று வரும் வழிப்பாதையை அடைத்ததாக தான் புகார் அளித்தேன்.

8. பொது பாதையை அடைத்ததாக தான் புகார் கொடுத்தேன் என்றாலும், நான் சென்று வரும் வழிப்பாதையை அடைத்ததாக புகார் கொடுத்ததாக தற்போது

பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன புகார் சம்மந்தமாக போலீசார் இடத்தை பார்வையிட்டு, விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். வழக்கு மூலத்தை உருவாக்க வேண்டி காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்னதாகவும் பல தடவை பிரதிவாதிகள் பாதை அடைப்பதற்காக முயற்சி செய்ததாக சொல்லியுள்ள நிலையில் எப்போது பாதை அடைப்பதற்கு முயற்சி செய்தார்கள் என்றால் குறிப்பிட்ட தேதி சொல்ல இயலாது.

9. பிரதிவாதிகள் பாதையை அடைக்கபோகிறார்கள் என்றும், அதை தடுக்க வேண்டும் என்றும், நீதிமன்றத்தில் இடைக்கால உறுத்துக் கட்டளை கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு உண்மையாக நடைபெற்றிருந்தால் நீதிமன்றத்தின் மூலம் இடைக்கால தடை உத்தரவு கோரி இடைக்கால மனு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

10. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் தெற்கு பக்கம் உள்ள ரோட்டில் இருந்து வாதியின் சொத்தின் வரை 1 மீ அகலமுள்ள நீரோடை உள்ளதாக காண்பித்துள்ளார் என்றால் சரிதான், அதை தொட்டு தான் நான் கோரும் பாதை அமைந்துள்ளது. விவசாய நிலங்களில் சானல் போகும் பகுதியில் ஒரு வரப்பு அமைக்கப்பட்டு இருக்கும் என்றாலும், அதை தான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் பாதையாக காண்ப்பித்துள்ளார் என்றால் சரியல்ல.

11. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் நீரோடையாக காண்பித்துள்ள பகுதியை தான் முன்ஜென்மிகள் கெங்காதரன் நாயர் என்பவருடன் போடப்பட்டதாக சொல்லப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாதையாக பயன்படுத்தப்படும் இடம் என்றால் சரியல்ல, பாதை எங்கும் கிடையாது, C பட்டிகை சொத்தை தான் வழிப்பாதையாக பயன்படுத்தி வருகிறோம். அதனுடைய புல எண்.503/1, 2 ல் உள்ள ஓடை 1 மீ அகலமுள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. என்னுடைய சொத்திற்கு தனியாக வேலிபோட்டு வைத்துள்ளேன் என்றால் இல்லை. வேலி போடவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. A பட்டிகை சொத்தின் வடக்கு பக்கத்தில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளது என்றாலும், அதை வேலிபோட்டு என் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரின் வரைபடத்தில் B, C, D, B என்று முக்கோண வடிவத்தில் காண்பிக்கப்படும் பகுதி அரசு புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல.

13. A பட்டிகை சொத்தை தொட்டு மற்ற சொத்துக்களை நான் விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அதில் ரியல் எஸ்டேட் செய்வதற்காக 1வது பிரதிவாதியின் கண்டத்தின் வழியாக பாதை அவகாசம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. B பட்டிகை சொத்தை 1வது பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்த முன்ஜென்மி தனிப்பட்டா பெற்று கைவசம் வைத்து அனுபவித்து வந்த சொத்து என்றாலும், அதை தான் 1வது பிரதிவாதிக்கு விலைக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

14. முன்ஜென்மிகள் செல்லைய்யன் என்பவரை கட்சியாக சேர்க்காமல் செல்லைய்யன் சொத்தில் வழியாக பாதையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று என்னுடைய முன்ஜென்மிகள் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. எந்த நிலையில் ஒருவற்கு உரிமைப்படாத சொத்தின் மீது பாதை அவகாசம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. சரியான உரிமையாளருக்கு எதிராக நிரந்திர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவருடைய முன்ஜென்மி விலைக்கு எழுதி கொடுத்தஆவணத்தில் B பட்டிகை சொத்தின் தெற்கு பக்கம் பாதை இருப்பதாகவும், வேறு எந்த வழிப்பாதை பற்றி எந்த குறிப்பும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் அதைப் பற்றி தெரியாது.

15. தெற்கு பக்கம் உள்ள பாதை என்னுடைய வேறு சொத்திற்கு செல்லும் என்றாலும், அந்த சொத்தின் மூலம் A பட்டிகை சொத்திற்கு சென்று வரமுடியும் என்றால் சரியல்ல, சுற்றி வரவேண்டும், நடுவில் ஆறு கண்டங்கள் உள்ளது. என்னுடைய சொத்திற்கு சென்று வர தான் பாதை உரிமை இந்த வழக்கில்

கோருகிறேன் என்றால் சரிதான். ரூ.50,000/- நஷ்டயீடு வழங்க வேண்டும் என்று எதற்காக கோரியுள்ளேன் என்றால் பாதை அடைத்ததால் வாழை மரத்தில் இருந்து அறுவடை செய்ததை சந்தைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. நான்மேற்சொன்னவாறு வாழை மரங்களை எடுத்துச் செல்ல முடியவில்லை என்றாலும், அதனால் நஷ்டம் ஏற்பட்டது என்பதை காண்ப்பிதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்,எங்களை 1வது பிரதிவாதி உள்ளே அனுமதிக்கவில்லை. நான் தற்போது A பட்டிகை சொத்திற்கு அந்த வழியாக தான் சென்று வருகிறேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே இந்த வழக்கை தாக்கல்செய்து பிரதிவாதிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியதற்கு நான் தான் நஷ்டயீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

16. இந்த வழக்கின் நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் பன்றி வளர்ப்பதற்கான செட் அமைக்கப்பட்டு இருந்ததை தன்னுடைய அறிக்கையில் காண்பித்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், வழக்கு பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.